JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-7  Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | 67/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-7 வில்சன் சகாயராஜ்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 15.04.2026 | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2025–ம் தேதியன்று நிலையை சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னண்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபொழுது அந்தியூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற அந்தியூர் சித்தக்கவுண்டன்பாளையம் நல்லமூப்பனூரை சேர்ந்த செங்கோட்டையன் என்பவரது மகன் கந்தசாமி என்பவரது அசால்ட் இன்டிமேஷனை பெற்று அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கந்தசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 24.02.2019ஆம் தேதியன்று காலை 06.00 மணிக்கு, நிலைய குற்ற எண்.67/2025, சட்டப்பிரிவுகள் 296(b), 115(2) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் காலை 06.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான ஜெகநாதன் மற்றும் பாலசுப்ரமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவயிடத்திலிருந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வேப்பங்குச்சி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்குஅனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் கந்தசாமி, சுதா, பழனிசாமி சிவகுமார், ஜெகநாதன் மற்றும் பாலசுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்து சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 17:42:36 +0530

நிலையில் 24.02.2019 தம்பிக்கலை ஐயன் கோவில் அருகில் நின்றிருந்த 2ம் எதிரி பழனிசாமி என்பவரை ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட விசாரித்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்தேன். பின்னர் அன்றைய தினமே நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட 1ம் எதிரி செல்வி என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்கநிலையப் பிணையில் விடுவித்தேன்.

17.03.2025 தேதியன்று வாதி கந்தசாமிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றேன். மருத்துவர் வழங்கிய காயசான்றில் கந்தசாமி என்பவருக்கு இரு கைகளிலும், இடது கன்னம் மற்றும் தலையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்ட பிரிவை 296(b), 115(2) BNS இருந்து சட்டப்பிரிவுகள் 296(b), 117(2) BNS ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 17.03.2025 தேதியன்று எதிரிகள் இருவர் மீதும் சட்டப்பிரிவுகள் 296(b), 117(2) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளும், இந்த வழக்கின் புகார்தாரரும் அண்ணன் தம்பி உறவு முறை என்றால், சரிதான். புகார்தாரர், எதிரிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து அந்த தீர்ப்பில் புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பாகம் பிரிவினை தொடர்பான பிரச்சனையின் காரணமாக தான் இந்த சம்பவம் ஏற்பட்டது என்றால், சரிதான். எதிரிகளுக்கு பாகப்பிரிவினையில் பாகம் கொடுக்கக் கூடாது என்பதற்காக தான் இந்த பொய் வழக்கு போடப்பட்டது என்றால், சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் எந்த விதத்திலும் பொறுப்பு அல்ல என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 17:42:43 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani